


**09.06.2025**

## தலைப்பு செய்திகள்

நாட்டில் உள்ள 140 கோடி மக்களின் ஒட்டு மொத்த பங்களிப்பால் பல்துறை வளர்ச்சியை இந்தியா விரைவாக எட்டியதாக பிரதமர் திரு.நரேந்திரமோடி பெருமிதம் தெரிவித்துள்ளார்.

அரசியல் கலாச்சாரத்தை மாற்றி செயல்பாடு மிகு ஆக்கப்பூர்வமான ஆட்சிமுறை மத்தியில் நிலைநாட்டப்பட்டுள்ளதாக பிஜேபி தேசிய தலைவர் திரு.ஜே.பி.நட்டா கூறியுள்ளார்.

2047ஆம் ஆண்டு வல்லரசாக உருவாவதற்கான பாதையில் இந்தியா தற்போது வெற்றியுடன் முன்னேறி செல்வதாக மத்திய இணை அமைச்சர் டாக்டர் எல்.முருகன் கூறியுள்ளார்.

தமிழகத்தின் பல்வேறு துறை செயல்பாடுகள் குறித்து முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் இன்று சென்னையில் சிறப்பு ஆலோசனை மேற்கொண்டார்.

வேலூர், திருப்பத்தூர், விழுப்புரம், கடலூர், அரியலூர், மயிலாடுதுறை, கிருஷ்ணகிரி, தர்மபுரி உள்ளிட்ட 11 மாவட்டங்களில் இன்று கனமழைக்கு வாய்ப்பிருப்பதாக சென்னை வானிலை ஆய்வுமையம் தெரிவித்துள்ளது.

## இனி விரிவான செய்திகள்

************

### பிரதமர்

நாட்டில் உள்ள 140 கோடி மக்களின் ஒட்டு மொத்த பங்களிப்பாலும், ஆற்றலாலும், பல்துறை வளர்ச்சியை இந்தியா துரிதமாக எட்டியுள்ளதாக பிரதமர் திரு.நரேந்திரமோடி மகிழ்ச்சி தெரிவித்துள்ளார்.

அனைவரையும் உள்ளடக்கிய வளர்ச்சியினால் சாதனைகளுடன் கூடிய இவ்வளர்ச்சியை தேசிய ஜனநாயக கூட்டணி அரசு

சாத்தியமாக்கியிருப்பதாக பிரதமர் தமது சமூகவலைதள பதிவில் பெருமிதம் வெளியிட்டுள்ளார்.

பொருளாதார வளர்ச்சி தொடங்கி, சமூக மேம்பாடு வரை, அனைத்தும், மக்கள் நலன் சார்ந்த நடவடிக்கைகளுக்கு முன்னுரிமை வழங்கப்பட்டு, அனைத்தையும் உள்ளடக்கிய முழுமையான மேம்பாட்டை, நம்நாடு கண்டுள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

விரைவாக வளரும் மாபெரும் பெரிய பொருளாதார நாடாக மட்டுமல்லாமல், காலநிலை மாற்றம், மின்னணு படைப்பாற்றல் திறன் போன்ற உலகளாவிய முக்கியத்துவம் வாய்ந்த பிரச்சனைகளிலும் இந்தியா தற்போது குரல் கொடுப்பதாக பிரதமர் எடுத்துரைத்தார்.

நம்பிக்கை, எதிர்நோக்கு, தீர்க்கமான வளர்ச்சி ஆகியவற்றின் அடிப்படையில் வளர்ச்சி அடைந்த பாரத பாதையில், இந்தியா விரைந்து முன்னெடுப்பதாக அவர் சுட்டிக்காட்டினார்.

நமோ செயலியில் உள்ள கிரா.ஃ.பிக்ஸ் தொழில்நுட்பம், வீடியோ காட்சிகள், கட்டுரைகள் உள்ளிட்டவற்றின் மூலம் இந்தியாவின் வளர்ச்சி பயணத்தை நாட்டு மக்கள் அறிந்துகொள்ள பிரதமர் அழைப்பு விடுத்துள்ளார்.

************

ஜே.பி. நட்டா

நாட்டின் அரசியல் கலாச்சாரத்தை மாற்றி செயல்பாடு, பொறுப்புணர்வு மிகுந்த, ஆக்கப்பூர்வமான ஆட்சிமுறையை பிரதமர் திரு.நரேந்திரமோடி தலைமையிலான மத்திய அரசு நிலைநாட்டியுள்ளதாக பிஜேபி தேசிய தலைவர் திரு.ஜே.பி.நட்டா தெரிவித்துள்ளார்.

தேசிய ஜனநாயக கூட்டணி ஆட்சியின் 11 ஆண்டு கால நிறைவை ஒட்டி புதுதில்லியில் இன்று செய்தியாளர்களிடம் பேசிய அவர், நாட்டின் அரசியல் நெறிமுறைகளில் மாற்றத்தை கொண்டுவந்து, புதிய பாதைக்கு வித்திடப்பட்டதாக புகழாரம் சூட்டினார்.

தேசிய ஜனநாயக கூட்டணி அரசு உறுதியுடனும், துணிவுடனும் முடிவுகளை மேற்கொண்டு, வலிமையான அரசாக தன்னை நிலைநிறுத்தியிருப்பதாக எடுத்துரைத்தார்.

மக்கள் நலனையே முதன்மையாக கொண்டு, வெளிப்படைத்தன்மைக்கு புதிய தரத்தை, அரசு நிர்ணயம் செய்திருப்பதாகவும் அவர் கூறினார்.

கடந்த 11 ஆண்டுகளில், வளர்ச்சி அடைந்த பாரதத்திற்கான வலுவான அடித்தளத்தை, மத்திய அரசு ஏற்படுத்தியதாகவும் இது பொன் எழுத்துக்களால் பொறிக்கப்பட வேண்டும் என்றும் அவர் எடுத்துரைத்தார்.

ஊழல் உள்ளிட்டவற்றால் 2014ஆம் ஆண்டு நிலவிய எதிர்மறையான சூழலை மாற்றி நேர்மறையான வளர்ச்சியுடன் ஆக்கப்பூர்வமான இந்தியாவை பிரதமர் திரு.நரேந்திர மோடி தலைமையிலான அரசு உருவாக்கியிருப்பதாக திரு.ஜே.பி.நட்டா கூறினார்.

************

**எல்.முருகன்**

2047ஆம் ஆண்டு வல்லரசாக உருவாவதற்கான பாதையில் நம்நாடு தற்போது வெற்றியுடன் முன்னேறி செல்வதாக மத்திய தகவல் ஒலிபரப்புத்துறை இணை அமைச்சர் டாக்டர் எல்.முருகன் தெரிவித்துள்ளார்.

புதுச்சேரி யூனியன் பிரதேச சட்டப்பேரவையை மின்னணு மயமாக்கும் திட்டத்தை இன்று துவக்கிவைத்து பேசியஅவர், 11 ஆண்டுகளை நிறைவுசெய்து 12ஆம் ஆண்டில் பிரதமர் தலைமையிலான மத்திய அரசு அடியெடுத்து வைக்கும் இத்தருணத்தில் இந்தியா சீரிய மாற்றங்களுடன் வளர்ச்சி அடைந்துள்ளதாக எடுத்துரைத்தார்.

கடந்த 10 ஆண்டுகளில் 27 கோடி இந்தியர்கள் வறுமை நிலையில் இருந்து மீட்கப்பட்டுள்ளதாகவும்,

அனைத்து இல்லங்களுக்கும் மின் இணைப்புகள் வழங்கப்பட்டிருப்பதாகவும் கூறினார்.

பிரதமரின் கிசான் வேளாண் நிதி உதவி திட்டத்தின் மூலம் 11 கோடிக்கும் அதிகமான விவசாயிகள் ஆண்டு தோறும் தலா ஆறாயிரம் ரூபாய் நிதி உதவி தங்கள் வங்கி கணக்கு மூலம் பெறுவதாகவும் கூறினார்.

உலகளாவிய மின்னணு பரிவர்த்தனையில் இந்தியா தற்போது 2ஆவது இடத்தில் உள்ளதாகவும் அவர் கூறினார்.

இறக்குமதி நாடாக இருந்த நம்நாட்டின் நிலை தற்போது ஏற்றுமதி நாடாக உருவெடுத்துள்ளதாகவம் அமைச்சர் பெருமிதம் தெரிவித்தார்.

முன்னதாக அவர் வெளியிட்டுள்ள சமூகவலைதள பதிவில் ஏழைகளுக்கு அதிகாரம் அளிப்பது தொடங்கி, அரசின் செயல்முறையை

எளிமை படுத்தியது வரையிலான மத்திய அரசின் 11 ஆண்டுகால பயணத்தை பாராட்டியுள்ளார்.

டாக்டர் எல்.முருகன் விழுப்புரம் மாவட்டம் செஞ்சியில் இன்றுமாலை கட்சி சார்ந்த பல்வேறு நிகழ்ச்சிகளில் பங்கேற்கிறார்.

************

பிரதமர் போட்டி

மத்தியில் பிரதமர் திரு.நரேந்திரமோடி தலைமையிலான அரசின் 11 ஆண்டுகால நிறைவை ஒட்டி mygov இணையதளத்தில் நாட்டு மக்களுக்கான பல்வேறு போட்டிகளுக்கு மத்திய தகவல் ஒலிபரப்பு அமைச்சகம் ஏற்பாடு செய்துள்ளது.

இதன்படி "மாற்றங்களுடன் இந்தியா, எனது அனுபவம்" என்ற தலைப்பிலான வலைதள கட்டுரை போட்டி

"வளர்ச்சி அடைந்த பாரத பாதையில் இந்தியா" என்ற தலைப்பில் இரண்டு நிமிட வீடியோ பதிவு,

"பாரதம் வளர்ச்சி பாதை பிரதிபலிக்கும் புகைப்பட காட்சி,"

"ஒரே தேசம், ஒரே உணர்வு, புகைப்பட கதை பதிவு,"

"ஒரே பாரதம் முன்னேற்ற பாதை வீடியோ கதை பதிவு" போன்ற நிகழ்வுகளில் நாட்டு மக்கள் பங்கேற்க வரும் 20ஆம் தேதிக்குள் விண்ணப்பங்களை பதிவு செய்ய அறிவுறுத்தப்பட்டுள்ளது.

************

முதலமைச்சர்

தமிழக சட்டப்பேரவையில் அறிவிக்கப்பட்டுள்ள அரசின் நலத்திட்டங்களின் நிலை குறித்து துறைவாரியாக அமைச்சர்கள் - அதிகாரிகளுடன் முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் இன்று ஆலோசனை மேற்கொண்டார்.

சென்னை தலைமைச் செயலகத்தில் நடைபெற்ற இக்கூட்டத்தில், அமைச்சர்கள் திரு.எ.வ.வேலு, திரு.மூர்த்தி, திரு.சக்கரபாணி, திரு.கே.ஆர்.பெரியகருப்பன் துறை அதிகாரிகள் பங்கேற்றனர்.

முக்கிய திட்டங்களுக்கு முன்னுரிமை அளித்து, விரைந்து செயல்படுத்த முதலமைச்சர் அறிவுறுத்தினார்.

இதனிடையே, மாநிலத்தில் வளர்ச்சி திட்டங்கள் தொடர்பாக தயாரிக்கப்பட்ட திட்டக்குழுவின் அறிக்கை முதலமைச்சரிடம் இன்று சமர்ப்பிக்கப்பட்டது.

***********

**நீதிமன்றம்**

தமிழகத்திற்கான கல்வி நிதி ஒதுக்கீட்டை மத்திய அரசு வழங்கவில்லை என்று கூறப்படுவது தொடர்பான மனுவை அவசர வழக்காக எடுத்துக்கொள்ள தமிழகம் தாக்கல் செய்த மனுவை உச்சநீதிமன்றம் அவசர விசாரணைக்கு ஏற்க மறுத்துள்ளது.

தமிழகத்திற்கு சென்ற நிதியாண்டு **சமக்ர சிக்‌ஷா** நிதி திட்டத்தின் கீழ் வழங்கப்பட வேண்டிய இரண்டாயிரம் கோடி ரூபாய் நிதியை மத்திய அரசு விடுவிக்கவில்லை என்று குறைகூறி மாநில அரசு இந்த மனுவை தாக்கல் செய்திருந்தது.

இந்த மனுவை விசாரித்த நீதிபதிகள் திரு.பிரசாந்த் குமார் மிஸ்ரா தலைமையிலான அமர்வு, இதுதொடர்பாக வழக்கு சென்ற மாதம் தான் தாக்கல் செய்யப்பட்டிருப்பதாகவும், உடனடியாக இதை விசாரிப்பதற்கான அவசரம் எதுவும் இல்லை என்றும் கூறியதோடு, கோடை கால விடுமுறைக்கு பின்னர் இந்த மனு விசாரிக்கப்படும் என்று தெரிவித்துள்ளது.

***********

**மாநிலங்களவை தேர்தல்**

தமிழ்நாட்டில் அடுத்த மாதம் காலியாகவுள்ள 6 மாநிலங்களவை இடங்களுக்கு வரும் 19-ம் தேதி நடைபெறும் தேர்தலுக்கான வேட்பு மனு தாக்கல் இன்றுடன் நிறைவடைகிறது.

மனுக்கள் நாளை பரிசீலிக்கப்படுகின்றன.

திமுக சார்பில் 4 பேரும்

அஇஅதிமுக சார்பில் 2 பேரும்

சுயேட்சைகள் 3 பேரும் வேட்புமனுக்களை தாக்கல் செய்துள்ள நிலையில் மனுக்களை விலக்கி கொள்ள வரும் 12-ம் தேதி கடைசிநாளாகும்.

போட்டியிருப்பின் வரும் 19ஆம் தேதி தேர்தல் நடைபெறும்.

***********

**கோவி செழியன்**

தமிழ்நாட்டில் பாலிடெக்னிக் கல்லூரி மாணாக்கருக்கு சிறப்பு துணை தேர்வு நடத்தப்படும் என்று மாநில உயர்கல்வித்துறை அமைச்சர் திரு.கோவி செழியன் தெரிவித்துள்ளார்.

சென்னையில் இன்று அவர் வெளியிட்ட அறிக்கையில் சிறப்பு துணை தேர்வுகளுக்கு இணைய வழியில் வரும் 18ஆம் தேதிமுதல் 23ஆம் தேதிவரை விண்ணப்பிக்கலாம் என்று தெரிவித்துள்ளார்.

கருத்தியல் தேர்வுகள் வரும் 30ஆம் தேதிமுதல் அடுத்த மாதம் 16ஆம் தேதிவரையும்,

செய்முறை தேர்வுகள் அடுத்த மாதம் 17 முதல் 25ஆம் தேதிவரை நடைபெறும் என்றார்.

இத்தேர்வு குறித்து dte.tn.gov.in என்ற இணையதளத்தில் அறிந்துகொள்ளலாம் எனவும் அமைச்சர் தெரிவித்தார்.

தமிழகத்தில் பொறியியல் கல்லூரிகளில் மாணாக்கர் சேர்க்கைக்கு விண்ணப்பித்தவர்கள் தங்களது சான்றிதழ்களை பதிவேற்றம் செய்வதற்கான காலஅவகாசம் இன்றுடன் நிறைவடைகிறது.

ரேண்டம் எண் நாளை மறுநாளும்,

தர வரிசை பட்டியல் வரும் 27ஆம் தேதியும் வெளியிடப்படுகின்றன.

************

**கீதாஜீவன்**

தமிழ்நாட்டில் அரசு சேவை இல்லங்கள் தொண்டு நிறுவனங்கள் மாணவியர் விடுதிகள் உள்ளிட்டவற்றில் பெண் காவலர்கள் நியமிக்கப்பட உள்ளதாக மாநில மகளிர் உரிமைத்துறை அமைச்சர் திருமதி கீதாஜீவன் தெரிவித்துள்ளார்.

சென்னையில் இன்று செய்தியாளர்களிடம் பேசிய அவர், அரசு மகளிர் பள்ளிகளில் பெண் காவலாளிகளை நியமிப்பது குறித்து பரிசீலிக்கப்படும் என்றார்.

பள்ளிகள், நிறுவனங்களில் வைக்கப்பட்டிருக்கும் புகார் பெட்டிகளில் தெரிவிக்கப்படும் புகார்களின் மீது உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுவருவதாக அமைச்சர் தெரிவித்தார்.

************

எடப்பாடி

தமிழ்நாட்டில் சட்டம் ஒழுங்கு சீர்குலைந்துள்ளதாக அஇஅதிமுக பொதுச்செயலாளர் திரு.எடப்பாடி கே.பழனிச்சாமி குற்றம் சாட்டியுள்ளார்.

மேற்கு மாவட்டங்களில் குற்ற சம்பவங்கள் அதிகரித்துள்ளதாக தமது சமூகவலைதள பதிவில் அவர் குறிப்பிட்டுள்ளார்.

உண்மை குற்றவாளிகளை கைது செய்து உரிய சட்ட நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்றும் அவர் வலியுறுத்தியுள்ளார்.

************

திருச்சி

திருச்சி மாவட்டத்தில் மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்கள் வைக்கப்பட்டுள்ள வைப்பறையை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.மா.பிரதீப்குமார் இன்று ஆய்வு செய்தார்.

அனைத்து கட்சி பிரதிநிதிகளின் முன்னிலையில் நடைபெற்ற இந்த ஆய்வின் போது பேசிய அவர் மாவட்டத்தில் பொது இடங்களில் அரசியல் கட்சிகள் சார்பில் வைக்கப்பட்டுள்ள கம்பங்களை முற்றிலும் அகற்றுமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளதாக கூறினார்.

வாய்ஸ்

************

கன்னியாகுமரி

போக்சோ குற்றங்கள் இல்லாத மாவட்டமாக கன்னியாகுமரியை மேம்படுத்தும் “நிமிர்” இயக்கம் சிறப்பாக செயல்படுவதாக மாவட்ட காவல்துறை கண்காணிப்பாளர் திரு.ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

வாய்ஸ்

************

தர்மபுரி தலைகவசம்

தர்மபுரி மாவட்டத்தில் ஆட்சித்தலைவர் அலுவலகத்திற்கு இருசக்கர வாகனத்தில் வருகை தருவோர் கட்டாயம் தலைகவசம் அணிய ஆட்சித்தலைவர் திரு.சதீஸ் உத்தரவு பிறப்பித்துள்ளார்.

இதுகுறித்து எமது செய்தியாளர்

வாய்ஸ்

************

**இருவரி**

திருப்பத்தூர் மாவட்டத்தில் பிரதமரின் தொழிற்பழகுனர் சேர்க்கை முகாம் இன்று நடைபெறுவதாக ஆட்சித்தலைவர் திருமதி சிவசௌந்தரவள்ளி தெரிவித்துள்ளார்.

பெரம்பலூர் மாவட்டத்தில் பிரதமரின் வேலை வாய்ப்பு உருவாக்கும் திட்டத்தின் கீழ் கடன் உதவிபெற விரும்புவோர் இணையதளம் மூலம் விண்ணப்பிக்கலாம் என ஆட்சித்தலைவர் திருமதி கிரேஸ் பச்சாவ் தெரிவித்துள்ளார்.

சிவகங்கை மாவட்டத்தில் சிறுபான்மையினர் பொருளாதார மேம்பாட்டு கழகத்தின் மூலம் கடனுதவி வழங்கும் முகாம் நாளை முதல் நடைபெற உள்ளதாக ஆட்சித்தலைவர் திருமதி ஆஷா அஜித் தெரிவித்துள்ளார்.

விருதுநகர் மாவட்டத்தில் தூய்மை பாரதம் இயக்கம் சார்பில் இரண்டாயிரம் வீடுகளில் மக்கும் மக்காத குப்பை தொட்டி வழங்கும் நிகழ்வு ஆட்சித்தலைவர் திரு.ஜெயசீலன் தலைமையில் இன்று நடைபெற்றது.

************

**வானிலை**

வளிமண்டல மேலடுக்கு சுழற்சி காரணமாக, வேலூர், திருப்பத்தூர், ராணிப்பேட்டை, திருவண்ணாமலை, கள்ளக்குறிச்சி, விழுப்புரம், கடலூர், அரியலூர், மயிலாடுதுறை, கிருஷ்ணகிரி, தர்மபுரி மாவட்டங்களில் இன்று கனமழை பெய்ய வாய்ப்புள்ளதாக சென்னை வானிலை ஆய்வுமையம் தெரிவித்துள்ளது.

ஈரோடு, கிருஷ்ணகிரி உள்ளிட்ட 7 மாவட்டங்களில் நாளை கனமழையும்,

தஞ்சை, திருவாரூர், நாகை, திருச்சி உள்ளிட்ட 15 மாவட்டங்களில் நாளை மறுநாளும் கனமழைக்கு வாய்ப்புள்ளதாக இம்மையம் கூறியுள்ளது.

************

**கோவில்**

திருச்செந்தூர் அருள்மிகு சுப்ரமணிய சுவாமி, கோவை மருதமலை, தஞ்சை சுவாமிமலை உள்ளிட்ட அனைத்து முருகன் திருக்கோவில்களிலும்

வைகாசி விசாக திருவிழா இன்று பக்தி சிரத்தையுடன் கொண்டாடப்படுகிறது.

**திருத்தணியில் பிரசித்திபெற்ற சுப்பிரமணியசுவாமி** திருக்கோவிலில் தீபாராதனையுடன் பால் பஞ்சாமிர்தம், தேன் இளநீர் போன்ற வாசைன திரவியங்களால் சிறப்பு அபிஷேகம் நடைபெற்றது.

தமிழகம் மற்றும் அண்டை மாநிலங்களான ஆந்திரம் கர்நாடகாவிலிருந்தும் ஏராளமான பக்தர்கள் இவ்விழாவில் பங்கேற்றுள்ளனர்.

**திருப்பரங்குன்றம் அருள்மிகு சுப்பிரமணிய சுவாமி** திருக்கோவிலில் இன்றுஅதிகாலை முதல் பக்தர்கள் சுவாமி தரிசனம் செய்துவருவதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

************

**ஹாக்கி**

Amstelveen-இல் நடைபெறும் ஆடவர் ப்ரோ லீக் ஹாக்கி போட்டியில் இந்தியா இன்று நெதர்லான்ஸை எதிர்கொள்கிறது.

************

**டென்னிஸ்**

ஜெர்மனியில் நடைபெறும் Stuttgart Open Tennis ஆடவர் இரட்டையர் காலிறுதிக்கு முந்தைய சுற்று ஆட்டங்களில் இந்தியாவின் ஸ்ரீராம் பாலாஜி, ரோஹன் போபன்னா, யூக்கி பாம்ப்ரி ஆகியோர் நாளை களமிறங்குகின்றனர்.

************

**இத்துடன் இந்த செய்தியறிக்கை முடிவடைந்தது**